# பிரிவு 5 - வயது 17 முதல் 19 வரை

பாடல் : 1

தலம் : திருவாழ்கொளிபுத்தூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : தக்கராகம் தாளம்: திருபுடை

பொடியுடை மார்பினர் போர்விடை ஏறிப் பூதகணம் புடைசூழக்
கொடியுடை ஊர் திரிந்து ஐயங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாள் நெடுங் கண்ணுமை பாகம் ஆயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலர் இட்டுக் கறைமிடற்றான் அடி காண்போம். 1.40.1

பாடலின் பொருள்:

திருநீறு அணிந்த மார்பினராய், வீரம் மிக்க விடை மீது ஏறி, பூதகணங்கள் புடைசூழ்ந்து வர, கொடிகள் கட்டிய ஊர்களில் திரிந்து பற்பல வாசகங்களைக் கூறிப் பலியேற்று, அழகிய வாள் போன்ற நெடிய கண்களையுடைய உமையொரு பாகராகிய சிவபிரானார் எழுந்தருளிய வாழ்கொளிபுத்தூர் சென்று மணம் கமழும் சிறந்த மலர்களால் அருச்சித்து அக்கறைமிடற்றார் திருவடிகளைக் காண்போம்.

பாடல் : 2

தலம் : திருஅறையணி நல்லூர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் அருளியது
பண் : காந்தாரம் தாளம்: ஆதி

வெய்யநோயிலர் தீதிலர் வெறியராய்ப்பிறர் பின்செலார்
செய்வதே அலங்காரமாம் இவையிவைதேறி இன்புறில்
ஐயம் ஏற்றுணுந் தொழிலரார் அண்ணலார் அறையணிநல்லூர்ச்
சைவனாரவர் சார்வலால் யாதும் சார்விலோம் நாங்களே. 2.77.9

பாடலின் பொருள்:

துன்பம் தரும் நோய்கள் எதுவும் இல்லாதவர். வெறிபிடித்தவர் போலப் பிறர் பின் செல்லாதவர். அவர் செய்வதே அலங்காரம் ஆகும். இவற்றை முறையே தெளிந்து இன்புறவேண்டின் ஐயமேற்றுண்ணும் தொழிலரும் தலைமையாளரும் ஆகிய அறையணி நல்லூர்ச் சைவராகிய சிவபெருமானே நமக்குத் துணை ஆவார். வேறு எதுவும் நமக்குத் துனை ஆகாது.

பாடல் : 3

தலம்: திருநனிபள்ளி திருநாவுக்கரசு நாயனார் அருளியது
திருவிருத்தம்

துஞ்சிருள் காலை மாலை தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத்து ஓதி நாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பால்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சு அமுதாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே. 4.70.5

பாடலின் பொருள்:

இருள் நீங்கும் காலையிலும் மாலையிலும் பெருமானுக்கும் தமக்கும் உள்ள உறவை மறக்காமல் திருவைந்தெழுத்தை ஓதினால், நாடோறும் சிவனடிக்கண் அன்பு பெருகி வளரும். அத்தகைய அன்பு வளருவதன் பேறாக, செய்யும் வஞ்சனையால் பாற்சோற்றை நஞ்சுடன் கலந்து சமைத்து, நல்ல வழக்கம் இல்லாத சமணர்கள் கொடுத்த அந்த நஞ்சை, அமுதமாக்கி அருளினார் திருநனிபள்ளியடிகள்.

பாடல் : 4

தலம்: திருவேட்களம் திருநாவுக்கரசு நாயனார் அருளியது
திருக்குறுந்தொகை தாளம் : ஆதி

துன்பம் இல்லை துயரில்லை யாம் இனி
நம்ப னாகிய நன்மணி கண்டனார்
என்பொனார் உறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி ஏத்தி இருப்பதே. 5.42.5

பாடலின் பொருள்:

என்றும் நமக்கு அருள் செய்கின்ற இறைவனாகிய திருநீலகண்டன் பொன் போன்றவன். இன்பமே வடிவானவன். அவன் திருவேட்களத்தில் எழுந்தருளியுள்ளான். அவனது சிவந்த திருவடிகளைப் போற்றினால் துன்பமும் இல்லை. துயரமும் இல்லை.

பாடல் : 5

தலம்: திருக்கச்சூர் ஆலக்கோயில் நம்பி ஆரூரர் அருளியது

பண் : கொல்லிக்கௌவாணம் தாளம் : ஆதி

மேலை விதியே விதியின் பயனே
விரவார் புரமூன் றெரிசெய்தாய்
காலை எழுந்து தொழுவார் தங்கள்
கவலை களைவாய் கறைக்கண்டா
மாலை மதியே மலைமேல் மருந்தே
மறவேன் அடியேன் வயல்சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர்
ஆலக் கோயில் அம்மானே. 7.41.5

பாடலின் பொருள்:

உயர்ந்த அறநெறியாயும், அதன் பயனாயும் உள்ளவனே, உன்னைப் பகையாய்க் கருதுவோரின் குற்றங்களையும் போக்கி அருள் செய்பவனே, காலையில் உன்னை வணங்குவாரது மனக்கவலையை அடியோடு நீக்குபவனே, நீலகண்டத்தை யுடையவனே, மாலையில் தோன்றும் அழகிய நிலவைப் போன்றவனே, மலைமேல் இருக்கும் அரிய மருந்து போன்றவனே, வயலும் கரும்பும் நிறைந்த, திருக்கச்சூரில் உள்ள ஆலக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற பெருமானே, அடியேன் உன்னை மறவேன்.

பாடல் : 6

தலம்: திருப்பழமண்ணிப் படிக்கரை நம்பி ஆரூரர் அருளியது

பண் : நட்டராகம் தாளம் : ரூபகம்

முன்னவன் எங்கள்பிரான் முதல்
காண்பரி தாயபிரான்
சென்னியில் எங்கள்பிரான் திரு
நீல மிடற்றெம்பிரான்
மன்னிய எங்கள்பிரான் மறை
நான்கும் கல்லால் நிழற்கீழ்ப்
பன்னிய எங்கள்பிரான் பழ
மண்ணிப் படிக்கரையே. 7.22.1

பாடலின் பொருள்:

எல்லார்க்கும் முன்னே உள்ளவனும் தனக்கு முன் ஒரு பொருள் இல்லாதவனும் யாவரினும் தலையாயவனும் அழகிய நீலகண்டத்தை உடையவனும் என்றும் அழியாது நிலைபெற்றிருப்பவனும் நான்கு வேதங்களையும் கல்லால மர நிழலிலிருந்து அருளியவனும் எங்கள் தலைவனுமாய் உள்ள இறைவன் எழுந்தருளியிருப்பது 'திருப்பழமண்ணிப்படிக்கரை' என்னும் தலமே .

<u>பாடல் : 7</u>

திருவிசைப்பா கருவூர்தேவர் அருளியது
தலம் : திருப்பூவணம்

செம்மனக் கிழவோர் அன்பு தா என்று உன்
சேவடி பார்த்திருந் தலச
எம்மனம் குடிகொண் டிருப்பதற்கு யான் யார்
என்னுடை அடிமைதான் யாதே
அம்மனங் குளிர் நாள் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழற் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணம் கோயில்கொண் டாயே. 9.14.6

பாடலின் பொருள்:

அடியவர்களுடைய மனம் மகிழும் பொருட்டு ஒருநாள் நீ பிச்சைக்கு எழுந்தருளும் போது உன் அழகில் மயங்கிய பெண் அடியாரின் கூந்தலில் வண்டுகள் இசைக்கும். திருப்பூவண நகரில் கோயில் கொண்டருளும் பெருமானே! செம்மையான மனத்தை உடைய அடியவர்கள் உன்னுடைய திருவருளை வேண்டி வருந்தவும், அடியேனுடைய மனத்தில் நீ இருப்பிடம் கொண்டு இருப்பதற்கு அடியேன் யாது தகுதி உடையேன்? உன் செயலுக்கு உன் அளவற்ற கருணையே காரணம்.